

பேரறிஞர் அண்ணா அவர்களின் 118–வது பிறந்தநாளை முன்னிட்டு கழக முதன்மைச் செயலாளர் சட்டபேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என். நேரு அவர்களின் வழிகாட்டுதலின்படி மாவட்டக் கழகச் செயலாளர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வைரமணி, காடுவெட்டி தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில், திருச்சி வடக்கு, திருச்சி மத்திய மாவட்டம் சார்பாக பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு சிந்தாமணி திருவுருவச் சிலைக்கும், கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவிதது மரியாதை செலுத்தினர். இதில் கழக நிர்வாகிகள் உடன் கலந்து கொண்டனர்.




மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மயிலாடுதுறை விஜய் திருமண மஹாலில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழகப் பிரதிநிதியும் முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் எம்.எல்.ஏ., பேசினார் உடன் மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., மாநில் பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி. கல்யாணம் மற்றும் கழக நிர்வாகிகள் எம்.பன்னீர்செல்வம், இரா.செந்தில்செல்வன் எம்.எல்.ஏ., குத்தாலம் க.அன்பழகன், ஆர்.அருள்செல்வம், பி.எம்.ரீதர், வை.சௌமியன், கி.சத்தியசீலன், டாக்டர் எம். பன்னீர்செல்வம், இராம்.இளங்கோவன், ஜி.என்.ரவி, முத்துமகேந்திரன், மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், பொருளாளர் மகா.அலெக்சான்டர் மற்றும் பலர் உள்ளனர்.

### மாவட்ட கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

# மயிலாடுதுறை மாவட்டத்தில் கழக சீரமைப்பு பணியை சிறப்பாக செய்திடுவோம்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பிரதிநிதிகள் கோவி.செழியன் எம்.எல்.ஏ., துரை கி.சரவணன் சிறப்புரை!

மயிலாடுதுறை, செப் 16-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறை விஜய் திருமண மஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் கே.ஜி. சினிவாசன் தலைமை தாங்கினார். தலைமைக் கழக பிரதி நிதிகள் முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் எம்.எல்.ஏ., மாநில் பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறை வேற்றப்பட உள்ள தீர்மானம் குறித்து மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முரு கன் பேசினார். கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான எம்.பன்னீர்செல்வம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் இரா. செந்தில்செல்வன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெக. வீரபாண்டியன், தகவல் தொழில் நூட்ப அணி துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர் மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வை.சௌமியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசிலன், டாக்டர் எம். பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம்.இளங்கோவன், ஜி.என்.ரவி, முத்துமகேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், பொருளாளர் மகா.அலெக்சான்டர் ஒன்றிய கழக செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், செல்ல. சேதுகுமார், மூவலூர் எம். மூர்த்தி, என். இளையபெருமாள், மலர்விழி திருமாவளவன், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், ஏ.ஆர். ராஜா, வைத்தியநாதன், ஞான. இமையநாதன், பி.முரு கமணி, பேரூர் கழக செயலாளர்கள் எம். சம்சுதீன், எம்.அன்புச்செழியன், எஸ்.கே.முத்துராஜா, அண்ணாதுரை. பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ. வின்செண்ட், பி. சிவதாஸ், ஹர்ஷத், வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், எஸ். சங்கரநாராயணன், ஜெ.கபிலன், பி.கென்னடி அ.காந்தி, சுபாநெடுஞ்செழியன், வழக்கறிஞர் அணி இராம. சேயோன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே. மருது, இரா.முருகன், க.அறிவுச்செல்வன், வி.எஸ். என்.செந்தில், காளி.தேசப்பன், இரா.முருகப்பா, ஆர்.சாந்தி, வி.எஸ்.பிரபாகரன், இரா. மனோகரன், தீபாசத்தியேந்திரன், ஆர்.செல்வராஜ், மாவைத்தியநாதன், கே.விக்னேஷ், டி.ராஜ்குமார், பெரு.வீரமணி, ஆர். எஸ்.ஸ்ரீதர், வெடி எஸ்.பாலமுருகன், எஸ்.எம்.சம்சுதீன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கோசி.மதி. திருமாவளவன், வினோத் பாண்டியன், சௌ.சர்வோதயன், ஜெ. ஜுபைர் அகமது, சக்தி விஜய், ஆனந்தன், குத்தாலம் பேரூராட்சி மன்ற தலைவர் சங்கீதா மாரியப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் முடிவில் மயிலாடுதுறை நகரக் கழக செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் நன்றி கூறினார். கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்

நூற்றாண்டை நோக்கி நடைபோடும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் புத்தெழுச்சியைப் பெற - அடுத்தகட்டப் பயணத்தில் வெற்றிகளை அடைய, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுவில் முன்மொழியப்பட்டுள்ளவாறு வயது வரம்பு காரணமாகவும் - ஒருவர் எத்தனை முறை பதவியில் இருக்கலாம் என்ற வரம்பு காரணமாகவும் பொறுப்புகளை இழப்பவர்கள் யாரையும் தலைவர் கைவிடப் போவதில்லை; அவர்கள் அனைவருக்கும் அவர்கள் தகுதிக்கேற்ற வேறு பொறுப்புகளை வழங்கும் வகையில் தலைவர் முடிவெடுப்பார்”. “சுதந்திரமான - நேர்மையான தேர்தல் மூலமாகப் புதிய நிர்வாகிகள், இளைஞர்கள் பொறுப்புகளுக்கு வருவார்கள். அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்” என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது. கிளைக் கழகங்கள்தான் நமது கழகத்தின் வலுவான கட்டமைப்புக்கு ஆணி வேர். கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகள் கிளைச் செயலாளர்கள். கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் புது ரத்தம் பாய்ச்சிட, இளம் தலைமுறையினருக்கு வாய்ப்புகளை வழங்கிட, கிளைக் கழகச் செயலாளருக்கான அதிகபட்ச வயது 45 என்று அறிவிக்கப்பட்டதையும், நகர - பேரூர் உள்பட்ட கழகங்களுக்கு வட்டக் கழகச் செயலாளரின் அதிக பட்ச வயது 50 என நிர்ணயிக்கப் பட்டுள்ளதையும், கிராமபுறங்களுக்கும் நகர் புறங்களுக்கும் இடைப்பட்ட அமைப்பு பேரூராட்சிகள். அந்தப் பேரூர் கழகங்களுக்கு பொறுப்பு வகிக்கும் பேரூர்க்கழகச் செயலாளரின் அதிகபட்ச வயது 60 என நிர்ணயிக்கப் பட்டுள்ளதையும், நகரக் கழகங்கள் சரா சரியாக 40 ஆயிரம் வாக்காளர்களை உள்ளடக்கிய ஒரு நகரக் கழகம் உரு வாக்கப்பட வேண்டும் என்பதற்கு இனங்க. நகர கழகங்க ளின் அமைப்பை வலுப்படுத்தும் வகையில், நகர செயலாளரின் அதிகபட்சவயது 60 என்று நிர்ணயிக்கப்படுந்தையும், ஒன்றியக் கழகங்கள். அவற்றை மேலும் வலிமை பொருந்திய அமைப்பாக மாற்றிட சராசரியாக 30 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு ஒன்றியக் கழகம் என்ற அடிப்படையில் ஒன்றிய அமைப்புகள் உருவாக்கிடுவது பன்றும் தலைமைக் கழகத்திலிருந்து கழக மறுசீரமைப்புக் குழுவால் அளிக்கப்படும் வழிகாட்டு நெறி முறைகளைக் கொண்டு மாவட்டத்தின் ஒன்றிய - நகர - பேரூர் - வார்டு கிளைக் கழக அமைப்புகளை 15 நாட்கள் என்ற காலவரையறைக்குள் உருவாதிவது என்றும் தலைமைக் கழகத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு செயலாளர்கள் எத்தனை முறை இருக்கலாம் என்பதையும் அறிவித்துள்ளதை கணக்கில் கொண்டு கழக மறு சீரமைப்பு பணியை அனைவரும் ஒன்றிணைந்து சிறப்பாக செய்திடுவது என்றும், தமிழ்நாடு சட்டமன்றத்தில் கழகத் தலைவர் தளபதி அவர்கள் பற்றி நிர்வாக திறமை யற்ற சோபா மாடல் முதலமைச்சர் பேசிய ஆணவ பேச்சுக்கு மயிலாடுதுறை மாவட்ட கழகம் சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்வது என்றும், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், தந்தை பெரியார் பிறந்த நாள், கழகம் தொடங்கிய நாள் ஆகிய மூன்றும் இணைந்து திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடப்படுகிறது. இயக்கத்திற்காக உழைத்த சான்றோர்களுக்கு விருது கள் வழங்கி சிறப்பிக்கும் விழாவாக வரு கின்ற செப்டம்பர் 15ம் நாள் சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் சிறப்பாக நடைபெற உள்ளது. அதுசமயம் மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க சார்பில் நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழகங்கள் சார்பாக இரு வண்ண கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி, நலதிட்ட உதவிகள் வழங்குவது எனவும், அதனை தொடர்ந்து சென்னை அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில்” நடை பெறும் முப்பெரும் விழாவில் சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட் பட்ட கழக தோழர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிப்பது எனவும் தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டு விருது பெரும் அனைவருக்கும் மயிலாடுதுறை மாவட்ட திமுக சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்படு கிறது

நம் வாழ்விற்கு வழிகாட்டியாக நம் இனம், மொழிக்கு உலக அளவில் பெருமை சேர்த்த பேரறிஞர் பெருந்தகை அறிவுலக ஆசான், காஞ்சி தந்த தத்துவமேதை பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் செப்டம்பர் 15 தேதியன்று மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய நகர பேரூர் பகுதியில் உள்ள கிளை வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி அண்ணா படம் வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தியது என்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரறிஞர் அண்ணா சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டும் என்றும் செப்டம்பர் 15 அன்று சென்னையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்டத்திலிருந்து கழக நிர்வாகிகள் கழகத்தினர் பெருமளவில் கலந்து கொள்வது என்றும் இந்த முப்பெரும் விழாவில் விருது வரும் தோழர்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வது என்றும தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாஸ்டர் தமிழ்ப்பித்தன்
### செப்டம்பர் 15 (2001)



கழகத்தில் சாதாரண தொண்டராக இருந்து படிப்படியாக உயர்ந்து தி.மு.க. மாநில தொண்டர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்புற பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று சிறந்த தொண்டர் அணியின் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் கையால் பதக்கம் பெற்றவர்.

தன் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் திருக்கரத்தால் விருதினைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியில் நின்ற மாஸ்டர் தமிழ்ப்பித்தன் அதே இடத்தில் தன்னுயிரை இழந்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவாரூர் நகரப் பகுதியில் உள்ள அறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாவட்ட கழகச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்எல்.ஏ மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நகர செயலாளர் வாரை எஸ். பிரகாஷ், ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ. தேவா மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய ,நகர கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்று மரியாதை செலுத்தினர்.

### தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் நலச்சங்கங்களின் பேரமைப்பு சார்பில்

# வைக்கத்தில் தந்தை பெரியார் சிலைக்கு மாலை!

### பேரமைப்பு நிர்வாகிகள் பங்கேற்பு !

வைக்கம், செப்.16-

செப்டம்பர் 17 தந்தை பெரியார் 148ஆவது பிறந்த நாள் வைக்கம் தந்தை பெரியார் நினைவிடத்தில் வைக்கம் போராட்ட நினைவு கூரல் மற்றும் தந்தை பெரியார் சிலைக்கு மரியாதை செய்யப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் வைக்கம் சட்ட மன்ற உறுப்பினர் கே.பினுமோன் (காங்கிரஸ்) பங்கேற்று சிறப்பிக்கிறார்.

2026 செப்டம்பர் 17 தந்தை பெரியார் 148ஆவது பிறந்த நாளன்று, தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் நலச்சங்களின் பேரமைப்பின் சார்பில் (National Confederation of OBC Employees Welfare Associations), கேரளாவில் வைக்கம் வீதிகளில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கான தடையை எதிர்த்து, அந்த தடையை உடைக்க 1924ல் பெரியார் நடத்திய வீரம் செறிந்த வைக்கம் போராட்டத்தை நினைவு கூறும் விதமாக வைக்கம் வீதிகளில் ஊர்வலமாக நடந்து சென்று, வைக்கத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் நினைவிடத்தில் ஒன்று கூடி, தந்தை பெரியார் சிலைக்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இந்த நிகழ்வில் வைக்கம் சட்டமன்ற உறுப்பினர் கே.பினுமோன் (காங்கிரஸ்) அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.

பேரமைப்பின் பொதுச் செயலாளர் கு.தனசேகர், தலைவர் சி.சேதுபதி, துணைத் தலைவர் தி.செ. அன்பரசு, செயல் தலைவர் ஆர்.செந்தாமரைக்கண்ணன், பொருளாளர் செல்வம் பெர்னாண்டோ முன்னெடுப்பில், தமிழ்நாட்டில் இருந்து ஒன்றிய அரசு மற்றும் பொதுத்துறைகளில் செயல்படும் இதர பிற்படுத்தப்பட்ட ஊழியர் நலச் சங்கங்களின் நிர்வாகிகள் பங்கேற்க உள்ளனர்.

### குறள்நெறியாளர் கு. பரசுராமன் நினைவு நாள்!

# பெரியார் படிப்பகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

### நெல்லுப்பட்டு அ. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது!




தஞ்சை,செப்.16-

தஞ்சை மாவட்டத்தின் குரள் நெறியாளர் கு.பரசுராமன் நினைவு பெரியார் படைப்பகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்த தினம் படிப்பக செயலாளர் நெல்லுப்பட்டு அ.இராமலிங்கம் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில செய்தி தொடர்பாளர் அ.ரகமதுல்லா, மொழிப்போர் தியாகி வீ.வெங்கட்ராவ் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில் திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் உரத்தநாடு இரா. குணசேகரன் பேரறிஞர் அண்ணாவின் சுயமரியாதை திருமணம், தமிழ்நாடு பெயர் மாற்றம் உள்ளிட்ட பேரறிஞர் அண்ணா தமிழ்நாட்டிற்கு செயல்படுத்திய திட்டங்கள் குறித்து பேசினார்.

இந்நிகழ்வில் கா.முத்துக்கிருஷ்ணன், திராவிடர் கழக மாநில மாணவரணி செயலாளர் இரா.செந்தூர பாண்டியன், பேரா.கு.குட்டிமணி, மருத்துவர் சதீஷ் குமார், பொறியாளர் ப.பாலகிருஷ்ணன், அ.பசுபதி, வெள்ளூர் முருகேசன், மா. மா.திராவிட செல்வன், ஓய்வு பெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜ் குமார், படிப்பதைக் காப்பாளர் ந.மாரிமுத்து உள்ளிட்டோ கலந்து கொண்டனர்.